**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06022021-4419

Volume: 6

Issue: 2

Month: October

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 17.07.2021

Accepted: 25.08.2021

Published: 01.10.2021

Citation:
Beham Kalitha, M. "The Feelings of The Womam in Present Day Poems." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 2, 2021, pp. 133–39.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i2.4419

*Corresponding Author:
easa59@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# The Feelings of The Womam in Present Day Poems

**M. Beham Kalitha**
*Mother Teresa Woman's University*
*Research and extenstion centre, Madurai, Tamil Nadu, India*
https://orcid.org/0000-0002-3805-2741

**Abstract** - Poems are composed by many from ancient time till date, those who are having interest, great vocabulary and its timely and proper use are sustained and became famous in this field. In poems of this great people the events happened in their own life or witnessed by them will be the core of their poems. In this order, this poem is also the one which is expressing the feelings of the woman. The important relationship in the whole world and which one make us proud is "MOTHER". This poem shed light on the feelings of the mother, the atrocities imposed on her in the name of family values or duty of mother and the husband's doubts about her morality. Also, this is explaining about the sexual harassments of the working woman and their mindset, infant suffering, and the one still in home without marriage due to religion, cast, creed, and financial difficulties. In short this is detailing all the sufferings of a woman in non-traditional poetry form.

**Keywords:** Non-traditional poems, feeling of a woman, various situations and reasons, impact of poets writing, enlightenment.

**References**

1. Parathalathansudandiram by krishangani, kawya publisher, Chennai.
2. 21-century naveena kavithaigalin puthya pokku by prof. P.M.Anbusivakawya publisher, Chennai.
3. Kavithai – by Mr. K. Sivakumar, Tamil inayakazhaham
4. Puthu kavithain thotramum athan valarchiyum by vallikannan, ezhthu printers, Chennai.

# இக்கால கவிதைகள் காட்டும் பெண்ணின் உணர்வுகள்

*மு. பேகம் கலிதா*
அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையம், மதுரை, தமிழ்நாடு, இந்தியா

***ஆய்வுச் சுருக்கம்***

*தமிழ் இலக்கிய பரப்பில் சங்ககாலம் தொடங்கி இன்றுவரை கவிதை எழுதும் மரபுபலராலும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. உலகில் உள்ள உறவுகளுள் மிக முக்கியமானவும், பெருமைபடவைக்கும் உறவு "தாய்" – தாய்மை உணர்வு பற்றியும், குடும்ப கட்டுமானம் என்ற பெயரில் அதற்கு மரபு அல்லது கடமை என்ற பெயரிட்டு பெண்ணின் மேல் செலுத்தப்படும் ஒடுக்குமுறைகள் பற்றியும் பெண்ணின் உணர்வும் படம் பிடித்து காட்டபெறுகிறது. பெண்ணிற்கு எதிராய் நடக்கும் மிகப்பெரிய கொடுமையாய் பாலியல் வன்முறை, பெண்சிசு எதிர்ப்பு, பொருளாதார நெருக்கடியால் வேலைக்கு செல்லும் பெண்கள் படும் மனவேதனை, சாதி, சமயம், பொருளாதாரம், அழகு என பல்வேறுபட்ட காரணங்களால் இன்றும் முதிர்கன்னிகளாய் வீட்டில் இருக்கும் பெண்கள் படும் உணர்வு என பல்வேறுப் பட்ட சூழ்நிலைகளில் பல்வேறுப்பட்ட காரணங்களால் பெண் படும் மன உணர்வுகளை புதுக்கவிதைகளின் வழி எடுத்துரைப்பதாய் இக்கட்டுரை அமையப் பெறுகிறது.*

***முக்கியச்சொற்கள்:*** *புதுக்கவிதை, பெண்ணின் உணர்வு, பல்வேறுப்பட்ட சூழல்கள், காரணங்கள், புதுக் கவிஞர்களின் எழுத்தின் தாக்கம் விழிப்புணர்வு, திறனாய்வு*

## முன்னுரை

இலக்கியம் என்பது சமுதாய உணர்வுகளைப் பிரதிபலிக்கும் ஒரு கலைவடிவமாகும். தமிழ் இலக்கிய பன்முகங்களில் கவிதை இலக்கியம் உயிர்நாடித் துடிப்பாக விளங்குகிறது. இலக்கியம் என்பது வாழ்வியலை படம்பிடித்து, மீண்டும் திருப்பிக் காட்டுவது, கவிதை என்பது அவ்விலக்கியத்தை செஞ்சொற்களால் உள்ளம் கவரும் வகையில் அனுபவத்தைக் கூறுவது சுருங்கச்சொன்னால் மனித எண்ணங்களின் ஓட்டம், வாழ்வியலின் உணர்வுகளையும், உணர்ச்சிகளையும் பிறருக்கு கிளர்ந்தெழக்கூடிய வகையில் பாடப்படும் கற்பனை வளமே கவிதை இலக்கியம் ஆகும். மற்ற இலக்கிய வடிவங்களை விடவும் கவிதை அக நினைவுகளை, அக உணர்வுகளை அதிகம் மொழியில் வெளிப்படுத்தும் சாத்தியப் பாடுகளை கொண்டிருக்கிறது. அத்தகு கவிதைகளின் மூலமாக வெளிப்படும் பெண்ணின் உணர்வுகளை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

## கவிதை இலக்கியம்

தமிழ் இலக்கியத்தின் அடிப்படை வடிவம் கவிதையாகும். இது காலத்திற்கு காலம் அரசியல், கலாச்சாரம், அறிவியல் என்பனவற்றின் தாக்கத்தால் மாற்றமுற்று, ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது. இன்னும் வளர்ந்து கொண்டே இருக்கிறது. தமிழ் இலக்கியத்தின் ஆரம்பமாகக் கொள்ளப்படுகின்ற சங்க காலம், சங்க மருவிய காலத்தில் அகவல், வஞ்சி, பரிபாடல், கலிப்பா என்றும் பல்லவர் காலம், சோழர் காலத்தில், சிறிது மாற்றமுற்று குறட்பா, வெண்பா, விருத்தப்பா என்றும், இதனைத் தொடர்ந்து வந்த நாயக்கர் காலத்தில் பிறமொழிச் செல்வாக்கால் அரிதில் பொருளுணரக்கூடிய

யமகம், திரிபு, மடக்கு என்றும் கவிதைகள் புனையப்பட்டன. இவையாவும் இன்ன பொருளை இப்படித்தான் பாடவேண்டும் என்று யாப்பிலக்கண வரையறைக்குள் நின்று பாடப்பட்டன. இதன்பின் ஐரோப்பியர் வருகையின் விளைவாக கவிதை வடிவமும் பொருளும் புதியபோக்கில் பரிணமித்தது. ஓசை நயம் மிக்க கண்ணி, வண்ணம், சிந்து முதலான கவிதை வடிவங்கள் தோற்றம் பெற்றன. இதன் மூலகர்த்தாவாக விளங்கியவர் மகாகவி பாரதியார் ஆவார். தற்காலத்தில் இலக்கண வரம்புகளை உடைத்தெறிந்து தேவையற்ற சொற்களைக் குறைத்து, கலையம் சத்துடன் புதுக் கவிதை, நவீன கவிதை, வசனக் கவிதை, குறியீட்டுக்கவிதை, ஹைக்கூ என்று பூத்துகுலுங்கிக் கொண்டிருக்கிறது கவிதை இலக்கியம்.

## இக்கால கவிஞர்கள்

பாரதியாரும், அவருக்கு அடுத்து வந்தவர்களும் தொடங்கி வைரமுத்து, மு.மேத்தா, அப்துல் ரகுமான், ஈரோடு தமிழன்பன், அறிவுமதி, வாலி, சிற்பி, மீரா, நா.காமராசன், கவிதா, கனிமொழி, புகழேந்தி, சுகிர்தராணி மாலதி மைதரி, சல்மா, தேவமகள், வெண்ணிலா, லீனா மணிமேகலை என்று பல வேறுப்பட்ட கவிஞர்கள் இன்று காணப்பெறும் சமுதாயத் திற்கு தங்களது கருத்துகளை தத்தம் கவிதைகள் மூலமாக எடுத்துரைக்கிறார்கள்.

## தாயுணர்வு

உலகிலுள்ள உறவுகளுள் மிக முக்கியமானதும், பெருமைப்பட வைக்கும் உறவுகளில் மிக முக்கியமான உறவு “தாய்” ஆகும். அத்தகு தாயின் பெருமையை எடுத்துக்கூறுவதாக கனிமொழி அவர்களின் ‘கருவறை வாசனை’ எனும் கவிதைத் தொகுப்பில் அழகுற எடுத்துரைக்கிறார்.

***“அவள் அவிழ்த்துப் போட்ட சேலையைச்***
***சுற்றிக் கொண்டு திரிந்தபோது,***
***அவளின் வாசனையை,***
***பூசிக் கொண்டதாய்த் தோன்றும்***
***முதல் மழையின் மண்வாடை போல,***
***மூச்சு முட்ட நிரப்பி வைத்துக் கொள்ள***
***தூண்டும் அம்மாவின் வாசனை,***
***எங்கெங்கோ பட்டகாயங்களுக்கு மருந்தாய்***
***அவள் மடியில் தலைவைத்துத்***
***தூங்கியபோதெல்லாம் பாதுகாப்பாய்,***
***என்னைத் தாங்கியமணம்”***
***-பறத்தல் அதன் சுதந்திரம் - ப -75***
***(கருவறைவாசனை-கனிமொழி)***

எனும் கவிதை மூலம் தாய்மையின் பெருமையும், தாயின் பாதுகாப்பு உணர்வையும் அழகுற எடுத்து கூறுகிறார்.

## குடும்ப அமைப்பு

குடும்ப அமைப்பில் வாழத்தொடங்கிய ஆணும் பெண்ணும் தங்களுக்குள் பலமான வேறுபாடுகளுடன் வாழ நேர்கிறது. அதில் சுயம் உணர்ந்த பெண்ணிற்கு தன் துணையான ஆணினால் ஏற்படும் அதிகாரப் புறகணிப்பு, புரிதலின்மை, அலட்சியப் பார்வை போன்றவையால் தினம் தினம் மனது சிதைக்கப்படுகிறது. இந்நிலையே விடுத்து பிரிய எத்தனிக்கும் வேளையில் குழந்தைகளுக்கானப் பொறுப்பு பெண்ணை மீண்டும் சிறைப்படுத்துகிறது என்பதை கவிதாவின் கவிதை வழி அறிய முடிகிறது.

***“வார்த்தைகளில் அலட்சியப்படுத்தும்***
***தருணங்களாலும்***
***பார்வைகளால் நிராகரிக்கப்படும்***
***நிமிடங்களாலும்***
***புறக்கணிப்பை புன்னகைத்து***
***நீண்ட பயணத்தில்***
***பிரியமுடியா எதிரிகளாய்***
***பயணிகள் ஆவதுண்டு***
***வாழ்கின்ற***
***வாழ்க்கைக்கும் வாழநினைக்கின்ற***
***வாழ்க்கைக்கும்***
***இடையில்***
***நீண்ட, நிரப்படாத***

**இடைவெளிகள்**
**இரட்டையாகவே ஓடிக் கொண்டிருக்கின்றன.**
**இணையாத தண்டவாளங்கள் என**
**எங்கள் குட்டிரதங்களின்**
**பயணத்திற்காக**
**வளைந்து நெளிந்து**
**போய்க் கொண்டிருக்கும் தண்டவாளங்கள்**
**இணைபிரியாததுபோலிருந்தாலும்**
**வாழ்தல்**
**சிலருக்கு இனியரயில் பயணம்**
**சிலருக்கு இரும்புத் தண்டவாளம்"**
**(-கறுத்தபெண் ப-26)**

என்ற இக்கவிதையில் குடும்பம் எனும் அமைப்பு பெண்ணை மீண்டெழ முடியாத அளவு அவளின் மீது கடமைகளைத் திணிக்கும் நிலையைக் கூறுகிறது. வாழ்வது கடினமாக இருந்தாலும் குழந்தைகளுக்காக வாழ வேண்டிய சூழலே பெரும்பான்மையான பெண்களுக்கு சமுகத்தில் நேரும் நிலையாக உள்ளதனையே இக்கவிதையும் வெளிப்படுத்தி உள்ளது.

### பெண் வலி

சமூகத்திலும், குடும்பத்திலும் ஒரு பெண்ணுக்கு அதிகமாக வலியை உண்டாக்கும் நபர் பெரும்பான்மையாக ஆணாக உள்ளான். அவ்வாறு வலிகளை உண்டாக்கிய ஆணிடமே தன் வலிகளைக் கூறும் பெண் மனதை சல்மா தன் கவிதைகளில் பாடியுள்ளார்.

**"நீஅருகிருந்த வேளை**
**நிலைக் கண்ணாடிபிம்பமென**
**எப்படியோ வந்துவிட்டது,**
**சில வருத்தங்களும் வலிகளும்**
**என் நினைவுகளில்**
**உன்னைப் பற்றிய வலிகளை**
**நீக்கிவிடச் சொல்லிமன்றாடுகிறாய்**
**உனக்குப் புரிவதில்லை**
**உன்னைப் பற்றிச் சொல்லாமல்**
**வலியைப் பற்றி மட்டுமே பேசுமென்**
**சாத்தியமின்மை"**
**(- பச்சைதேவதை ப-24)**

எனும் இக்கவிதையில் பெண் தன்னுடைய வேதனைகளும் வலிகளும் யாரால் உண்டாகியது என்பதைப்பாடியுள்ளார், வலியைஉண்டாக்கிய ஆணிடமே அதை கூறவரும் நிலையில் அதை கேட்கவிரும்பாமல் ஆண் மனம் தவிர்க்கவே எண்ணுகிறது. பெண் வலியையும் வேதனையும் போக்க முடியாத ஆண் அதை கேட்கக்கூட விரும்பவில்லை என்பதை இக்கவிதை வழிஅறிய முடிகிறது.

ஓர் ஆணின் வார்த்தைகள் பெண்ணின் மனதில் பல்வேறு தாக்குதல்களை உண்டாக்கும் என்பதை லீனா மணிமேகலை தம் கவிதை வழி கூறியுள்ளார்.

**"வீசிய**
**சொல்லில்**
**அறுந்து தொங்கியது**
**தலை**
**நிஜமாகத்தான்**
**புலந்தனர்**
**எனக்**
**காதுகள்**
**படைத்துச்**
**சமைந்தன**
**பிளந்த நிலத்தின்**
**ஓலமானது**
**சுருங்கி சுணங்கியது.**
**நிழலின் இருமையாய்**
**சுழன்றடித்த**
**சொல்லின்**
**கசாப்புமணத்தில்**
**அன்பு**
**மூச்சடைத்தது**
**சொன்னதில் உறைத்தது**
**சொல்லாததின்**
**வீரியம்"**
**-(ஒற்றையிலையென ப-167)**

பெண் மனம் எதிர்பாராத நிலையில் வெளிப்படும் ஆணின் அவதூறுச் சொல் அவளை ஒரு நிமிடம் உறையவைக்கிறது. காதுகளும் நம்பாமல் அதை உறுதிசெய்ய

முனைகின்றன. இறுதியில் ஆண் தன் அதிகாரத்தை வெளிப்படுத்த பயன்படுத்திய தொனி இதுவென அறியும் பெண்ணின் மனவுணர்வைப் பாடியுள்ளார்.

### பாலியல் கொடுமை

இக்காலத்தில் பெண் தொட்டுவிடாத துறைகளும், எட்டிவிடாத சிகரங்களும் இல்லை. ஆனால் பட்டுவிடாத துயரங்களும் இல்லை. பெண்களுக்கு எதிரான மிக முக்கிய கொடுமைகளில் ஒன்றான பாலியல் கொடுமையைக் கூறலாம். முப்பது நிமிடங்களுக்கு ஒரு சிறுமி உலகின் ஏதோ ஓர் மூலையில் பாலியல் வன்முறைக்கு உள்ளாகிறாள் என்றால் பெண்ணின் நிலையை என்னவென்று சொல்லுவது, வெறும் ஜடப்பொருளாக, நுகர்பொருளாக கருதிப் பெண்ணை பாலியல் தொல்லைக்கு உட்படுத்தும் சமூக போக்கை கண்டித்து புகழேந்தி கவிதையின் மூலம் எடுத்து கூறுகிறார்.

***“கடைசி ஏவாள்***
***பிறப்புறுப்பில்லாமல்***
***பிறந்தாள்***
***அப்போதும்***
***உலகம் தடவிப் பார்த்தது”***

***-புகழேந்தி***

என்கிற புகழேந்தியின் கவிதை வேதனைகளை பெண்ணின் வலியை இதைவிட நேர்த்தியாய் முகத்தில் அறையும் வண்ணம் சொல்லிவிட முடியாது.

### பெண் குழந்தை வெறுப்பு

ஆணும் பெண்ணும் சமம் என்ற உரிமை குரல் ஒலிக்கும் இக்காலத்திலும் ஆண் குழந்தை பிறந்தால் ஒரு விதமாகவும், பெண் குழந்தை பிறந்தால் ஒரு விதமாகவும் பார்க்கும் சமூகப் பார்வை இன்னும் மாறவேயில்லை. அவற்றை எதிர்த்துப் பேசும் குரலாய் உடல் அரசியலை அழகாய் எடுத்துரைக்கும் சுகிர்தராணியின் கவிதைகள் எப்பொழுதுமே பெண் சமூகத்துக்கு உரியவை.

***“துள்ளும் வலியும்***
***மின்னலென வெட்டும்***
***வேதனையும்***
***உச்சமாய் எகிற***
***உயிரை அசைத்து***
***இரத்தச் சகதியில்***
***மீண்டெழுத குழந்தையின்***
***துணி விலக்கி***
***பெண்ணென முகம் சுழிப்பவனே***
***அன்று***
***என் மீது பரவியபோது***
***மனம் களித்தவன் நீதானே?”***

***-சுகிர்தராணி***

என்ற கவிதை மூலம் இன்றும் பெண் குழந்தை பிறந்தால் முகம் சுழிக்கும் ஆணினத்த திற்கு எதிராய் அசத்தலாய் ஒரு கேள்வியை வைக்கிறார்.

### முதிர் கன்னிகள்

ஒரு பெண்ணின் பிறப்பு, வளர்ப்பு, திருமணம், குழந்தைகள் எல்லாமே பெரும்பாலும் அப்பா, சித்தப்பா, பெரியப்பா, மாமா, அண்ணன் என்று உறவாய் சுற்றியிருக்கும் ஆணினத்தாலேயே, அவர்கள் புகுத்தும் சாதி, இனம் சார்ந்த கட்டுபாடுகளாலே செய்யப்பட்டிருக்கின்றன. இன்றும் உரிய காலத்தில் மணம் ஆகாமல் இருக்கும் முதிர்கன்னிகள் குறித்து மாலதி மைத்ரியின் கவிதையொன்றில்

***“ஊரின் அனைத்து வீடுகளும்***
***நடப்பட்ட பெண்களென நிற்கின்றன***
***சாளரங்கள் கண்களாகவும் வாசல்***
***யோனியாகவும்***
***யாரோ ஒரு ஆணிற்காக***
***ஆயுள் முழுவதும்***
***காத்துக் கிடக்கின்றன***
***வயதுக் கேற்றபடித் தம்***
***உறவுகளுக்காக”***

***-மாலதிமைத்ரி***

என்னும் கவிதை மூலமாக இன்றும் முதிர் கன்னியாய் உள்ள பெண்ணின் உணர்வு வெளிபடையாக அறியப்படுகிறது.

**வேலைக்குச் செல்லும் பெண்**

பொருளாதார நெருக்கடியால் இன்று வேலைக்குச் செல்லும் பெண்கள் ஏராளம். அங்கு அவர்கள் படும் வேதனையும் ஏராளம். பிறந்ததன் குழந்தைக்கு பால் கொடுக்ககூட நேரம் இல்லாமல் வேலைக்குச் செல்லும் பெண்கள் படும் வேதனையை வெண்ணிலா தன் கவிதை மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

***"வியர்வையைக் கழுவிகழுவி***
***சுத்தமாய் வைத்திருப்பதாய்***
***நினைத்துக் கொள்கிறேன்***
***என்னை***
***அத்தனையும் மீறி***
***ஆடைகளுக்குள்ளிருந்து***
***சொட்டுசொட்டாய்***
***கோப்புகளில் இறங்கும்***
***தாயின் வாசம்***
***அவசரமாய்***
***அலுவலககழிப்பறையில் நுழைந்து***
***பீச்சிவிடப்படும்***
***பாலில் தெறிக்கிறது***
***பசியைத் தின்றலறும் குழந்தையின் அழுகுரல்***
***-(பறத்தல் அதன் சுகந்திரம் ப-199)***
*(அ. வெண்ணிலா)*

இவ்வாறு பொருளாதார நெருக்கடியால் வேலைக்குச் செல்லும் பெண்கள் படும் வேதனை ஒரு புறம் இருக்க, வேலைக்கு வரும் பெண்ணே இழிவாகப் பார்க்கும் ஆணின் இழிநிலைப் பார்வையை எடுத்துக் கூறுவதாய் தேவமகள் கவிதையின் மூலம் காணலாம்.

***"சுறுசுறுப்பான அழகான***
***விற்பனைப் பெண்கள் தேவை***
***பொட்டப்புள்ளக***
***சிவனேன்னு***
***கொடுத்தகாசுக்கு உழைக்கும்***
***வர்றவனுக்கும் கண்ணுக்கும் குளிர்ச்சியா***
***கூட்டம் குறையாது***
***அப்பப்ப நானும்***
***தொட்டுப் பாத்துக்கலாம்"***
***-பறத்தல் அதன் சுதந்திரம் ப-133***
*(கடைப்பெண் கடைப்பெண்-தேவமகள்)*

இவ்வாறு வேலைக்கு வரும் பெண்ணை மிகமோசமாக இழிவாக என்னும் ஆண்களின் பார்வையை எடுத்துக் கூறுகிறார். இது மிகவும் வருத்தத்திற்கும் கண்டிப்பிற்கும் உரியதாகும்.

**விழிப்புணர்வு**

பெண்ணிற்கு பெருமை சேர்க்கும் மாண்பு தாய்மை. அத்தகு தாய்மை அடைய அவள்படும் வலியை விடவா இவ்வுலகம் அவளுக்கு வலிகொடுத்திடும். ஆனால் பெண்ணே இன்று குடும்ப அமைப்பு என்ற சிறைக்குள் அடைத்து வைத்துள்ளார்கள். அதையும் மீறி அவள் வெளிவந்தால் தாண்டும் தடைகள் ஏராளம். பெண் வெற்றிப்பெற பெண்கள் பேசவேண்டும், எழுந்து உரக்க குரலில் உரிமை கேட்டுப் பேச வேண்டும் என்பதை அறிவுமதி அவர்களின் கவிதை மூலம் அறியலாம்.

***"பெண்ணே***
***கல்வியில் விடி***
***அரசியல் தெளி***
***சட்டங்கள் செய்***
***ஊர்வலம் போ***
***முழக்கமிடு***
***பெண்ணைப் பேச***
***பெண்ணேஎழு"***

***-அறிவுமதி***

என்று பெண்ணிற்கு விழிப்புணர்வு ஏற்றுப்படுவதாய் அமையப் பெற்ற கவிதை.

**முடிவுரை**

காலம் என்னும் பாதையில் கவிதை என்னும் ஊர் 'பன்னெடுங்காலமாகவே வளர்ந்து வந்து கொண்டிருக்கிறது. மரபுக் கவிதை என்னும் பெயர் கடந்து புதுக்கவிதை என்னும் பெயர் பெற்று நாளை ஏதோ ஒரு பெயர் தாங்கி ஊர்ந்து கொண்டுதான் இருக்கும். கவிஞன் தன்னை மொழியால் உருவாக்கப்பட்ட உயிரியாக உணர்கிறான். அதன் சாதகபாதக விஷயங்களையும் தன்னை விளக்கிக் கொள்ள முடியாத அர்த்தங்களையும்

மொழியின் வழியாக தேடிச்செல்கிறான். தன்னை கவிதையாக முன்மொழிகிறான். தாய்மையின் மாண்பு, குடும்ப அமைப்பு என்ற போர்வையில் பெண்ணில் மேல் செலுத்தப்படும் அதிகாரம் அல்லது அன்பு என்ற பெயரை, கடமை என்ற பெயரை வைத்து பெண்ணின் மேல் செலுத்தப்படும் ஒடுக்கு முறைகள் வேலைக்குச் செல்லும் பெண்ணின் மனவேதனை ஆண்கள் பார்வையில் பெண் போகப் பொருளாக, அடிமைத்தொழில் புரியும் உயிரியாக காணும் இழிநிலைத் தன்மை, பெண்ணுக்கு எதிராய் நடக்கும் பாலியல் வன்முறை மற்றும் சாதி, சமயம், வரதட்சனை என பல்வேறு காரணங்களால் முதிர்கன்னிகளாய் வீட்டில் இருக்கும் பெண்ணின் மனவுணர்வு, தான் ஒழுக்கம் பற்றி கணவன் வசைப்படுவதை கேட்டும் பெண் படும் துயரம் என்ற பல்வேறு சூழ்நிலையில் உள்ள பெண்ணின் உணர்வுகளை கவிதைகள் வழி படம் பிடித்து காட்டுவதாய் அமைய பெறுகிறது.

## துணைநின்ற நூல்கள்


1. க்ருஷாங்கனி. *பறத்தல் அதன் சுதந்திரம்.* சென்னை, காவ்யா பதிப்பகம்
2. பு. மு. அன்புசிவா. *21-ம் நூற்றாண்டு நவீன கவிதைகளில் புதிய போக்குகள்.* சென்னை, காவ்யா பதிப்பகம்.
3. கி. சிவகுமார். *கவிதைத் தமிழ் இணையக் கல்விக் கழகம்*
4. வல்லிக்கண்ணன். *புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்.* சென்னை, எழுத்து பிரசுரம்.